# ஔவையார்

ஔவையார் நன்கு அறிமுகமான ஒரு பெண்பாற் புலவர். ஔவையார் என்னும் பெயர் கொண்ட புலவர்கள் பலர் இருந்தனர். நூலமைதி, தமிழ்நடை, தொடர்புடையோர் முதலானவற்றைக் கருத்தில் கொண்டு வரலாற்று நோக்கில் பார்க்கும்போது அவர்கள் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது புலனாகும்.

இவர் பாணர் மரபினர் அதியமான் நெடுமான் அஞ்சியோடு நட்புக்கொண்டு, பலகாலம் அவன் அவையில் வாழ்ந்திருந்து அவரையும் பிறரையும் பாடியவர் அக்காலத்துப் புலவர்களிடையேயும் அரசர்களிடையேயும் பெருமதிப்புப் பெற்றுத் திகழ்ந்தவர். இவருடைய செய்யுட்கள் எளிமை, செறிவு, பொருள் நுணுக்கம் கொண்டவை. அதியமான், தொண்டைமான், நாஞ்சில், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பலரையும் பாடியவர். இவர் தெய்வப் புலவர் என்னும் கீர்த்தியோடு வாழ்ந்தவர். அகநானூறு, குறுந்தொகை, நற்றினை என்னும் தொகை நூற்களிலும் இவரது செய்யுட்கள் காணப்படுகின்றன.

அவ்வையார் என்ற பெயரில் தமிழகத்தில் நான்கு புலவர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் இருந்திப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

முதலாவதாக வாழ்ந்தவர் சங்ககால அவ்வையார். இவர் தொண்டை நாட்டு மன்னர் அதியமானுக்கு நல்ல நண்பர். நீண்ட நாள் வாழ்வைத் தரும் நெல்லிக் கனியை தான் உண்ணாது மன்னர் அதியமான் நீண்ட நாள் வாழ வேண்டும் எனக் கருதி கொடுத்தார் என்பது வரலாற்றுக் கதை. இந்த அவ்வையார் சங்க இலக்கியத்தில் 59 பாடல்களை பாடியுள்ளார்.

பக்திக் கால இறுதியில் விநாயகர் அகவலைப் பாடியவர் இரண்டாவது அவ்வையார். இவர் பாடிய விநாயகர் அகவலைத்தான் விநாயகரை வழிபடுபவர்கள் முதல் நூலாகக் கொள்வர். இது மிகுந்த பக்திச் சுவையுடைய நூல். ஆழ்ந்த பொருளுடையது. அதற்குப் பலர் பல விளக்கங்கள் எழுதியுள்ளனர்.

மூன்றாவது அவ்வையார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நீதி நூல்களைப் பாடியவர், சங்கால அவ்வையார் அரசர்களோடு பழகி வாழ்ந்தவர். இரண்டாம் அவ்வையார் பக்தர்களோடு வாழ்ந்தவர். மூன்றாம் அவ்வையார் குழந்தைகளோடு வாழ்ந்தவர். குழந்தைகளுக்காக நீதி நூல்களை எழுதியவர். சிறுவயதில் மனப்பாடம் செய்து கொண்டு, வயதான பின்பு பொருளைத் தெளிவாக உணரும் நிலையில் அமைந்தவை இவர் பாடல்கள்.

நான்காவது அவ்வையார் தனிப் பாடல்கள் மிகுதியாகப் பாடியவர். முருகக் கடவுள் குழந்தை நிலையில் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று அவ்வைப் பாட்டியிடம் கேட்க, அவன் மரத்தை உலுக்க பழங்கள் மண்ணில் விழ பழத்திலுள்ள மண்ணை நீக்க அவ்வை ஊத, 'பழம் சுடுகிறதா? பாட்டி, என்ற கதையுடன் தொடர்புடைய அவ்வையார். இவர் மிகச் சிறந்த கருத்துள்ள தனிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

- ❖ அவ்வையாரின் நூல்களில் 7 மட்டுமே கிடைத்துள்ளன அவை :
- ❖ ஆத்திசூடி (Arriccuti)
- ❖ கொன்றை வேந்தன் (Konraiventan)
- ❖ நல்வழி (Nalvazhi)
- ❖ மூதுரை (Moodurai)
- ❖ *ஞானக்குறள்* (Gnanakural)
- ❖ *விநாயகர் அகவல்* (Vinayakar Akaval)
- ❖ *நாலு கோடிப் பாடல்கள்* (4 Kodi Padalkal)

ஔவையார் ஒரு சமயம் சில புலவர்களைக் காணச் சென்ற போது அப்புலவர்கள் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்படவே அதன் காரணத்தை வினவினார். "நாளைப் பொழுது விடிவதற்குள் நான்கு கோடிப் பாடல்கள்" இயற்ற வேண்டும் என மன்னவன் ஆணையிட்டுள்ளான். அதனால் தான் கவலையடைந்துள்ளோம்" என்று அவர்கள் கூறினராம். இதைக் கேட்ட ஔவையார், இவ்வளவுதானா, இதற்காகவா கவலை கொண்டுள்ளீர்கள்"என்ற கூறி கோடி என்ற வார்த்தைய அடக்கிய 4 பாடல்களைக் சொன்னார். இதுவே நாலு கோடிப் பாடல்கள் எனப்படும்.

மூன்றாவது அவ்வையார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நீதி நூல்களைப் பாடியவர், சங்கால அவ்வையார் அரசர்களோடு பழகி வாழ்ந்தவர். இரண்டாம் அவ்வையார் பக்தர்களோடு வாழ்ந்தவர். மூன்றாம் அவ்வையார் குழந்தைகளோடு வாழ்ந்தவர். குழந்தைகளுக்காக நீதி நூல்களை எழுதியவர். சிறுவயதில் மனப்பாடம் செய்து கொண்டு, வயதான பின்பு பொருளைத் தெளிவாக உணரும் நிலையில் அமைந்தவை இவர் பாடல்கள்.

நான்காவது அவ்வையார் தனிப் பாடல்கள் மிகுதியாகப் பாடியவர். முருகக் கடவுள் குழந்தை நிலையில் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று அவ்வைப் பாட்டியிடம் கேட்க, அவன் மரத்தை உலுக்க பழங்கள் மண்ணில் விழ பழத்திலுள்ள மண்ணை நீக்க அவ்வை ஊத, 'பழம் சுடுகிறதா? பாட்டி, என்ற கதையுடன் தொடர்புடைய அவ்வையார். இவர் மிகச் சிறந்த கருத்துள்ள தனிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

- ❖ அவ்வையாரின் நூல்களில் 7 மட்டுமே கிடைத்துள்ளன அவை :
- ❖ ஆத்திசூடி (Arriccuti)
- ❖ கொன்றை வேந்தன் (Konraiventan)
- ❖ நல்வழி (Nalvazhi)
- ❖ மூதுரை (Moodurai)
- ❖ *ஞானக்குறள்* (Gnanakural)
- ❖ *விநாயகர் அகவல்* (Vinayakar Akaval)
- ❖ *நாலு கோடிப் பாடல்கள்* (4 Kodi Padalkal)

ஔவையார் ஒரு சமயம் சில புலவர்களைக் காணச் சென்ற போது அப்புலவர்கள் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்படவே அதன் காரணத்தை வினவினார். "நாளைப் பொழுது விடிவதற்குள் நான்கு கோடிப் பாடல்கள்" இயற்ற வேண்டும் என மன்னவன் ஆணையிட்டுள்ளான். அதனால் தான் கவலையடைந்துள்ளோம்" என்று அவர்கள் கூறினராம். இதைக் கேட்ட ஔவையார், இவ்வளவுதானா, இதற்காகவா கவலை கொண்டுள்ளீர்கள்"என்ற கூறி கோடி என்ற வார்த்தைய அடக்கிய 4 பாடல்களைக் சொன்னார். இதுவே நாலு கோடிப் பாடல்கள் எனப்படும்.